**கவனிக்க.**- 2006.05.26 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி II மற்றும் பகுதி IV (அ) ஆகியன பிரசுரிக்கப்படவில்லை.

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1448 - 2006 ජූනි 02 වැනි සිකුරාදා - 2006.06.02

*1448 ஆம் இலக்கம் - 2006 ஆம் ஆண்டு யூன் மாதம் 02 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி I : தொகுதி (IIஆ) – விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவைசெய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | 500 | உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள் | 501 |
| கேள்விப்பத்திர முடிவுகள் பற்றிய அறிவித்தல்கள் | - | அந்நிய குடிவகை உத்தரவுச் சீட்டு விண்ணப்பங்கள் | - |
| பொருட்கள் விற்பனவும் பிறவும் | - | ஏல விற்பனைகள் | 502 |
| ஆய விற்பனையும் குத்தகையும் | - | நானாவித அறிவித்தல்கள் | - |


**கவனிக்க.**- தேயிலை ஆராய்ச்சிச் சபை (திருத்தம்) சட்டமூலம் 2006, ஏப்பிறல் மாதம் 07 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்குக் குறைநிரப்பியாக வெளியிடப்படுகிறது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான

### முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையின் ஒவ்வொரு பகுதியினதும் ஒவ்வொரு தொகுதியின் இறுதியிலும் ஒவ்வொரு மாதத்தின் முதல் வார வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டிருக்கும் வாராந்த வர்த்தமானியிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் தேதிகள், நேரங்கள் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதியிலும் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசி நாள் **வர்த்தமானியில் அறிவித்தல் பிரசுரமாகும் தேதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணியாகும்.** வெற்றிடங்களுக்கான விண்ணப்பங்களுக்கும் கேள்விப்பத்திரங்களுக்கும் கடைசித் தேதியும் நேரமும், ஏல விற்பனைக்குத் தேதியும் நேரமும் குறிக்கும் அறிவித்தல்கள் தயாரிக்கப்படும்போது மேற்கண்ட மாற்றத்துக்குக் கவனஞ் செலுத்துமாறும் பிரசுரமாகும் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறையுள்ளவர்கள் ஆக்கபூர்வமாகவும் வெற்றிகரமாகவும் பங்குகொள்வதற்கியலும் வகையில் அறிவித்தல்கள் அரசாங்க அச்சகத்திற்கு அனுப்பப்படச் செலவாகும் நேரத்தையும் அவை பிரசுரமாகும் தேதியையும் கருத்திற் கொள்ளுமாறும் எல்லா அரசாங்கத் திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆதியன அறிவுறுத்தப்படுகின்றன.

வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கான எல்லா அறிவுறுத்தல்களும் கண்டிப்பாக அவை பிரசுரமாகும் தேதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு முன்** இத்திணைக்களத்தை வந்தடைய வேண்டும். அதாவது 2005, யூன் 09 ஆந் தேதி வெள்ளிக்கிழமை வர்த்தமானியிற் பிரசுரிக்கப்பட வேண்டிய அறிவித்தல்கள் 2006, மே 26 ஆந் தேதி நண்பகலிலோ அதற்கு முன்னரோ அரசாங்க அச்சகத்தை வந்தடைய வேண்டும்.

**லக்ஷ்மன் குணவர்தன,**
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2005 ஆம் வருடம் சனவரி மாதம் 01 ஆந் திகதி.

# கேள்விப்பத்திர அறிவித்தல்கள்

## இலங்கைப் புகையிரதப் பகுதி

### 8எண். TRACTION MOTOR ARMATURE M 7 CLASS LOCO களைப் பழுதுபார்த்தல்

1. 8 எண். TRACTION MOTOR ARMATURE M7 CLASS LOCOS MOTIVE களை பழுதுபார்த்தலுக்கான பொறியிடப்பட்ட கேள்விகளை உற்பத்தியாளர்கள்/ஒப்பந்தக்காரர்கள் மற்றும் ஏனைய முடியுமான அமைப்புகளிட மிருந்து இலங்கை, கொழும்பு, த. பெ. இல. 355, புகையிரதத் தலைமையகம், இலங்கைப் புகையிரதப் பகுதி, திணைக்களக் கேள்விச் சபை, தலைவரினால் ஏற்றுக்கொள்ளப்படும். கேள்விதாரர்கள் அவர்களது கேள்விகளை நேரடியாக அல்லது இலங்கையில் பதிவு செய்யப்பட்ட மற்றும் அட்டோர்ணி தத்துவத்தின் மூலம் அதிகாரமளிக்கப்பட்ட முகவரினூடு சமர்ப்பித்தல் வேண்டும்.

2. கேள்விகள் 2006.07.06 பிற்பகல் 2.00 மணிக்கு மூடப்படும்.

3. மீளளிக்கப்படாத கேள்விக் கட்டணமாக ரூபா 2,500 ஐச் செலுத்தி, கொழும்பு 10, ஒல்கொட் மாவத்தை, புகையிரதக் களஞ்சிய அத்தியட்சகர் அலுவலகத்தில், 2006.07.05 பி. ப. 3.00 மணி வரை பெறக்கூடிய படிவங்களிலேயே கேள்விகள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

4. கேள்விகள் மூடப்பட்டவுடன் கொழும்பு 10, ஒல்கொட் மாவத்தை, ரெயில்வே களஞ்சியத் திணைக்கள அலுவலகத்தில் உடனடியாகத் திறக்கப்படும். கேள்விகள் திறக்கப்படும்போது கேள்விதாரர் அல்லது அவர்களின் அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகள் சமுகமளிக்குமாறு கேட்கப்படுகிறார்கள்.

5. சீலிடப்பட்ட கேள்விகள் பதிவுத் தபால் மூலம் அனுப்பப்படல் வேண்டும் அல்லது நேரில் கொழும்பு 10, த. பெ. இல. 355, ரெயில்வே களஞ்சியத் திணைக்களம், இலங்கை ரெயில்வே, கேள்விச் சபைத் தலைவரிடம் ஒப்படைக்கலாம்.

6. கொழும்பு 10, ஒல்கொட மாவத்தை, ரெயில்வே களஞ்சிய அத்தியட்சகர் அலுவலகத்தில் கேள்வி ஆவணங்களை இலவசமாகப் பரீட்சிக்கலாம்.

மேலதிக விபரங்களுக்கு தயவு செய்து, கொழும்பு 10, ஒல்கொட் மாவத்தை, த. பெ. இல. 1347, ரெயில்வே களஞ்சிய திணைக்களம், ரெயில்வே களஞ்சிய அத்தியட்சரை தொலைபேசி இல. : 94(11)2432044 அல்லது 94(11)2436818 இல் தொடர்பு கொள் ளவும்.

ஒப்பந்த இல. : SRS/F. 6489

தலைவர்,
திணைக்களக் கேள்விச்சபை,
இலங்கைப் புகையிரதப் பகுதி.

6-20

## இலங்கைப் புகையிரதப் பகுதி

### இலங்கை புகையிரதப் பகுதிக்கு 24,000 LOW FRICTION COMPOSITE BRAKE BLOCKS கொள்வனவு செய்தல்

1. இலங்கை புகையிரதப் பகுதிக்கு 24,000 LOW FRICTION COMPOSITE BRAKE BLOCKS கொள்வனவு செய்வதற்கான பொறியிடப்பட்ட கேள்விகளை உற்பத்தியாளர்கள்/விநியோகஸ்தர்களிடமிருந்து இலங்கை, கொழும்பு- 10, த. பெ. இல. 355, புகையிரதத் தலைமையகம், இலங்கைப் புகையிரதப் பகுதி, கேள்விச் சபை, தலைவரினால் எற்றுக்கொள்ளப்படும். உற்பத்தியாளர்கள் இலங்கையில் பதிவு செய்யப்பட்ட மற்றும் அட்டோர்ணி தத்துவத்தின் மூலம் அதிகாரமளிக்கப்பட்ட முகவரினூடு கேள்விகளை சமர்ப்பித்தல் வேண்டும்.

2. கேள்விகள் 2006.07.13 பிற்பகல் 2.00 (இலங்கை நேரம்) மணிக்கு மூடப்படும்.

3. மீளளிக்கப்படாத கேள்விக் கட்டணமாக ரூபா 2,500 ஐச் செலுத்தி, கொழும்பு 10, ஒல்கொட் மாவத்தை, புகையிரதக் தலைமையக அலுவலகத்தில், அல்லது வெளிநாடுகல் உள்ள இலங்கைத் தூதரங்களில்2006.07.12 பி. ப. 3.00 மணி (இலங்கை நேரம்) வரை பெறக்கூடிய படிவங்களிலேயே கேள்விகள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

4. கேள்விகள் மூடப்பட்டவுடன் கொழும்பு 10, ஒல்கொட் மாவத்தை, ரெயில்வேக் களஞ்சியத் திணைக்கள அலுவலகத்தில் உடனடியாகத் திறக்கப்படும். கேள்விகள் திறக்கப்படும்போது கேள்விதாரர் அல்லது அவர்களின் அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகள் சமுகமளிக்குமாறு கேட்கப்படுகிறார்கள்.

5. சீலிடப்பட்ட கேள்விகள் பதிவுத் தபால் மூலம் அனுப்பப்படல் வேண்டும் அல்லது நேரில் இலங்கை கொழும்பு - 10, த. பெ. இல. 355, ரெயில்வே தலைமையகம், இலங்கை ரெயில்வே, கேள்விச் சபைத் தலைவரிடம் ஒப்படைக்கலாம்.

6. கொழும்பு 10, ஒல்கொட் மாவத்தை, ரெயில்வே களஞ்சிய அத்தியட்சகர் அலுவலகத்தில் கேள்வி ஆவணங்களை இலவசமாகப் பரீட்சிக்கலாம்.

மேலதிக விபரங்களுக்கு தயவு செய்து, கொழும்பு 10, ஒல்கொட் மாவத்தை, த. பெ. இல. 1347, ரெயில்வே களஞ்சிய திணைக்களம், ரெயில்வே களஞ்சிய அத்தியட்சகரை தொலைபேசி இல. : 94(11)2432044 அல்லது 94(11)2436818 இல் தொடர்பு கொள்ளவும்.

குறிப்பு: எஸ்ஆர்எஸ்/எவ் 6515.

தலைவர்,
திணைக்களக் கேள்விச்சபை,
இலங்கைப் புகையிரதப் பகுதி .

7-21

### இலங்கைப் புகையிரதப் பகுதி

### 12,000 எண். HIGH FRICTION COMPOSITE BRAKE BLOCKS வழங்குதல்

1. இலங்கை புகையிரதப் பகுதிக்கு 12,000 எண். 1 HIGH FRICTION COMPOSITE BRAKE BLOCKS வழங்குதலுக்கான பொறியிடப்பட்ட கேள்விகளை உற்பத்தியாளர்கள்/விநியோகஸ்தர் களிடமிருந்து இலங்கை, கொழும்பு,10 த. பெ. இல. 355, புகையிரதத் தலைமையகம், இலங்கைப் புகையிரதப் பகுதி, கேள்விச் சபை, தலைவரினால் ஏற்றுக்கொள்ளப்படும். உற்பத்தியாளர்கள் இலங்கையில் பதிவு செய்யப்பட்ட மற்றும் அட்டோர்ணி தத்துவத்தின் மூலம் அதிகாரமளிக்கப்பட்ட முகவரினூடு கேள்விகளை சமர்ப்பித்தல் வேண்டும்.

2. கேள்விகள் 2006.06.29 பிற்பகல் 2.00 மணிக்கு (இலங்கை நேரம்) மூடப்படும்.

3. மீளளிக்கப்படாத கேள்விக் கட்டணமாக ரூபா 2,500 ஐச் செலுத்தி, கொழும்பு 10, ஒல்கொட் மாவத்தை, புகையிரதக் களஞ்சிய திணைக்களத்தில் அல்லது வெளிநாடுகளிலுள்ள இலங்கை தூதரகங்களில் , 2006.06.28 பி. ப. 3.00 மணி வரை (இலங்கை நேரம்) பெறக்கூடிய படிவங்களிலேயே கேள்விகள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

4. கேள்விகள் மூடப்பட்டவுடன் கொழும்பு 10, ஒல்கொட் மாவத்தை, புகையிரதக் தலைமையத்தில் உடனடியாகத் திறக்கப்படும். கேள்விகள் திறக்கப்படும்போது கேள்விதாரர் அல்லது அவர்களின் அங்கீகரிக் கப்பட்ட பிரதிநிதிகள் சமுகமளிக்குமாறு கேட்கப்படுகிறார்கள்.

5. சீலிடப்பட்ட கேள்விகள் பதிவுத் தபால் மூலம் அனுப்பப்படல் வேண்டும் அல்லது நேரில் கொழும்பு 10, த. பெ. இல. 355,புகையிரத தலைமையகத்தில், இலங்கை புகையிரத, கேள்விச் சபைத் தலைவரிடம் ஒப்படைக்கலாம்.

6. கொழும்பு 10, ஒல்கொட் மாவத்தை, புகையிரத களஞ்சிய அத்தியட்சகர் அலுவலகத்தில் கேள்வி ஆவணங்களை இலவசமாகப் பரீட்சிக்கலாம்.

மேலதிக விபரங்களுக்கு தயவு செய்து, கொழும்பு 10, ஒல்கொட் மாவத்தை, த. பெ. இல. 1347, ரெயில்வே களஞ்சிய திணைக்களம், ரெயில்வே களஞ்சிய அத்தியட்சகரை தொலைபேசி இல. : 94(11)2432044 அல்லது 94(11)2436818 இல் தொடர்பு கொள்ளவும்.

தலைவர்,
திணைக்களக் கேள்விச்சபை,
இலங்கைப் புகையிரதப்பகுதி.

தொடர்பு இல. : எஸ். ஆர். எஸ். /எல் /6517.

7-22

---

## உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள்

### அட்டோர்ணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

பிலியந்தலை, மடபாத்த, கஹபொல, கஹபொல வீதி, 222/2, விக்ரமபால ஹேவாவிதாரன ஆகிய நான், ஸ்கொட்லாந்து, KY129DW, Dunfermline, Castleblair Park, இல. 27 ஐச் சேர்ந்த எலிஸபத் ஆன் ஹேவாவிதாரனவுக்கு வழங்கப்பட்ட கொழும்பு பகிரங்க நொத்தாரிசு J. A. R. வீரசிங்கவினால் உறுதிப்படுத்தப்பட்ட 1995.05.03 ஆந் திகதியிடப்பட்ட எனது சட்ட ரீதியான அட்டோர்னித் தத்துவத்தை இன்று முதல் இரத்துச் செய்வதாக இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசுக்கும், ஐக்கிய இராச்சியம் மற்றும் ஸ்கொட்லான்ட் அரசுக்கும் மக்களுக்கும் இத்தால் அறிவித்துக்கொள்கிறேன்.

விக்ரமபால ஹேவாவிதாரன

6-81

---

### அட்டோர்ணி தத்துவத்தை இரத்துச் செய்தல்

தற்பொழுது ஜாஎல கனுவன பிலிப்னேரி வீதி, இல. 30/1, இல் வசிக்கும் ஜெராட் நிமல் கோட்டெகே ஆகிய நான் நொத்தாரிசு கே. கே. கே. அமரதாச என்பவரால் 1992, யூலை 27 ஆந் திகதி உறுதிப்படுத்தப்பட்ட இல. 384 கொண்ட அவ்வாறே 2004 ஓகத்து 17 ஆந் திகதி 283/94 கொண்ட தினசரி புத்தகத்தில் இல. 10398 இன்கீழ் பதிவுசெய்யப்பட்டுள்ள அட்டோர்ணி தத்துவப்பத்திரத்தின் மூலம் ஜாஎல, கனுவன, 65, சாந்த ஜோசப் வீதியில் வசிக்கும் கோட்டெகே அர்ன் திலக் கரவாஜு என்பவருக்கு வழங்கப்பட்ட அட்டோர்ணி பத்திரம் 2006, மே 10 ஆந் திகதி முதல் இரத்துச் செய்யப்படுகின்றது எனவும் இத்திகதியின் பின்னர் அவரால் மேற்கொள்ளப்படுகின்ற எந்தவொரு நடவடிக்கைக்கும் நான் பொறுப்பாளியல்ல எனவும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசுக்கும் பொதுமக்களுக்கும் இத்தால் அறியத்தருகின்றேன்.

ஜெராட் நிமல் கோட்டெகே.

6-112

# ஏல விற்பனைகள்

## இலங்கை வங்கி

*இலங்கை வங்கி கட்டளைச் சட்டம் 22 ஆம் பிரிவினதும் (397 ஆம் அத்தியாயம்) அதன் திருத்தங்களினதும்கீழ் விற்பனை அறிவித்தல்*

சொத்து, நிலமனை ஏலவிற்பனை

கடன் தொடர்பு இலக்கம் : 447/97

இலங்கை வங்கிப் பணிப்பாளர்கள் சபை இலங்கை வங்கி கட்டளைச் சட்டம் 19 ஆம் பிரிவுக்கமைய எடுத்த தீர்மானத்தின்படி இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 2000.06.30 ஆந் திகதிய 1139 ஆம் இலக்க வர்த்தமானியிலும் 2000.06.27 ஆந் திகதிய தினகரன், டெய்லி நியூஸ், தினமின ஆகிய பத்திரிகைகளிலும் வெளியிடப்பட்ட அறிவித்தல்களுக்கமைய நிலுவை முதலையும் விற்பனைத் திகதி வரையான வட்டியையும் மேற்குறிப்பிட்ட கட்டளைச் சட்டத்தின் பிரிவு 26 இன்கீழ் அறவிடக்கூடிய செலவு மற்றும் பணங்களையும் அறவிடும் பொருட்டு இங்கு கீழ் அட்டவணையில் விபரித்த சொத்தையும் நிலமனையையும் இல. 15, ரதகுரு மாவத்தை, சிலாபம் என்னும் முகவரியைச் சேர்ந்த ஏலதாரர் திரு. டி. எல். ஜே. நிஸ்ஸங்க 2006.07.20 ஆந் திகதி மு. ப. 10.30 மணிக்கு அதே இடத்தில் வைத்து பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்வாரென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

### அட்டவணை

வடமேல் மாகாணம், புத்தளம் மாவட்டம், சிலாபம் பதிவுப் பிரிவில் பிட்டிகலக் கோரளை வடக்கு முன்னேஸ்வரம் பத்துவில் கடற்கரை கிராம உத்தியோகத்தர் பிரிவில் மெதவத்த, வெலிஹேனவில் அமைந்துள்ளதும் 'மெதவத்த' என யாவரும் அறிந்ததும் அழைக்கப்படுவதுமான காணி கோவை இல. 46/12/3 இன்கீழ் நில அளவையாளர் நாயகத்தால் வரையப்பட்ட 1990.02.14 ஆந் திகதியிட்ட பி. பி. பு. இல. 2608 இல் விபரித்த துண்டு 108 என பிரிக்கப்பட்ட மேற்குறிப்பிட்ட துண்டு 108 இன் எல்லைகளாவன- வடக்கில் : பி. பி. பு. 2608 இல் துண்டு 99 ; கிழக்கில் : துண்டு 99 மற்றும் 107 ; தெற்கில்: துண்டு 109 ; மேற்கில் : மேற்குறிப்பிட்ட வரைபடத்தில் துண்டு 122 எல்லைகளாகக் கொண்டு 0.051 ஹெக்டெயர்கள் அல்லது இருபது தசம் மூன்று ஆறு பேர்ச்சுகள் (0ஏ. 0றூ. 20.36பே.) விஸ்தீரணமுடைய காணியும் பயிர்கள், கட்டிடங்கள் மற்றும் அங்கு அமைந்துள்ள சகலதும் ஆகும்.

இது சிலாபம் காணிப்பதிவகத்தில் எல். டி. ஓ. 116 இன்கீழ் பதிவுசெய்யப்பட்டுள்ளது. எனினும் மிகவும் சரியானது சிலாபம் காணிப்பதிவகத்தில் எல். டி. ஓ. ஹலா 4/776 மற்றும் எல். டி. ஓ. ஹலா 13/168 இல் ஆகும். இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் சனாதிபதி மாண்புமிகு ஆர். பிரேமதாஸ அவர்களின் அலுவலக ஒப்பத்தினதும் முத்திரையினதும்கீழ் வழங்கப்பட்ட 1990, பெப்புருவரி 14 ஆந் திகதியிட்ட அரச வழங்கல் இல. 10723 இன்கீழ் உரிமையாக்கப்பட்டுள்ளது.

டீ. பி. நிவ்டன்,
முகாமையாளர்.

இலங்கை வங்கி,
சிலாபம்.

6-120

## வரையறுக்கப்பட்ட சம்பத் வங்கி

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 9 ஆம் பிரிவின்கீழ் விற்பனை அறிவித்தல்*

கணக்கு இல. 0007 5003 7992-எச். எம். டபிள்யு. பண்டார மற்றும் ஆர். எம். சி. ரத்நாயக்க

"05.09.2003 ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானியிலும் 2003.08.23 ஆந் திகதிய "ஐலண்ட்", "திவயின" மற்றும் "தினகரன்" எனும் பெயரிலான தினசரி செய்திப் பத்திரிகைகளிலும் பிரசுரிக்கப்பட்ட 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின்கீழ் 2002.11.14 ஆந் திகதியிடப்பட்ட வரையறுக்கப்பட்ட சம்பத் வங்கிப் பணிப்பாளர்கள் சபையினால் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்திற்கமைய, ஒன்பது இலட்சத்து பத்தொன்பதாயிரத்து தொளாயிரத்து அறுபத்தாறு ரூபா தொண்ணூற்றைந்து சதம் (ரூ. 9,19,966.95) ஐ மேலும் விற்பனைத் திகதிவரை ஏழு இலட்சம் ரூபா (ரூ. 7,00,000) கொண்ட தொகை மீது ஆண்டுக்கு இருபத்திமூன்று சதவீத (23%) வட்டியுடனும், உறப்பட்ட விளம்பரச் செலவுகள் மற்றும் வேறு கட்டணங்கள் (எவையேனும் கொடுப்பனவுகள் பெறப்பட்டிருப்பின் அவற்றையும் கழித்து) ஆகியவற்றுடனும் சேர்த்து அறவிடுவதற்காக, இத்துடனுள்ள அட்டவணையில் விவரிக்கப்பட்டுள்ள ஆதனத்தை கண்டியைச் சேர்ந்த உத்தரவுபெற்ற ஏலதாரர் ஐ. டபிள்யூ. ஜயசூரிய அவர்களால் 23.06.2006 ஆந் திகதி பி. ப. 3.00 மணிக்கு சொத்து அமைந்த இடத்தில் பகிரங்க ஏலமூலம் விற்பனை செய்ய வேண்டுமென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

### அட்டவணை

மத்திய மாகாணம், கண்டி மாவட்டம், யட்டிநுவர கங்கவட்ட கோரளை எஹலியகொட தர்மாசோக்க மாவத்தையில் அமைந்த உத்தரவுபெற்ற நில அளவையாளர் ஆர். சி. ஓ. டி லாமொட்டே அவர்களால் தயாரிக்கப்பட்டு 1972, செத்தெம்பர் 18 ஆந் திகதியிடப்பட்ட நில அளவை வரைபடம் இல. 4624 இல் குறிப்பிடப்பட்டு துண்டு 1 என அடையாளமிடப்பட்டதுமான முதலில் தர்மாசோக்க மாவத்தையில் வரிமதிப்பீடு இல. 19 மற்றும் 20 ஐக் கொண்ட தற்போது தர்மாசோக்க மாவத்தையில் வரிமதிப்பீடு இல. 157 மற்றும் 161 ஐக் கொண்ட "முஸ்லிம் வத்த" என அழைக்கப்படும் காணியிலிருந்து உத்தரவுபெற்ற நில அளவையாளர் பி. எச். டி. டி. சில்வா அவர்களால் தயாரிக்கப்பட்டு 1992, நவெம்பர் 24 ஆந் திகதியிடப்பட்ட நில அளவை வரைபடம் இல. 504ஏ இல் குறிப்பிடப்பட்ட துண்டு 2 என அடையாளமிடப்பட்டதுமான பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்ட காணித்துண்டு முழுவதும் அதன்கண் அமைந்த பயிர்கள், கட்டிடங்கள் மற்றும் சகலதுடன். சொல்லப்பட்ட நில அளவை வரைபட இல. 504ஏ இன்படி துண்டு 2 இன் எல்லைகளாவன- கிழக்கில் : முதல் லொக்குமெனிக்கேவுக்குச் சொந்தமாகவிருந்த வரிமதிப்பீடு இல. 11 ஐக் கொண்ட பட்டுவத்த ; தெற்கில் : மேற்கூறப்பட்ட நில அளவை வரைபடத்தில் துண்டு 1 எனக் குறிப்பிடப்பட்ட காணி ; மேற்கில் : தர்மாசோக்க மாவத்தை மற்றும் வடமேற்கில் : நகரசபை ரோட் என்பவையாகும். மேற்கூறப்பட்ட

வரைபடம் இல. 504ஏ இற்கமைய இந்தக் காணி பதினான்கு தசம் ஏழு ஐந்து பேர்ச்சஸ் (0ஏ. 0றூ. 14.75பே.) அல்லது 0.03242 ஹெக்டெயார் விஸ்தீரணமுடையது. இந்தக் காணி கண்டி காணிப்பதிவகத்தில் தொகுதி/பக்கம் ஏ 238/233 இன்கீழ் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

கம்பனி செயலாளர்.

6-118/1

---

### வரையறுக்கப்பட்ட சம்பத் வங்கி

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் கடன் மீட்புச் சட்டத்தின் (விசேட ஏற்பாடுகள்) 9 ஆம் பிரிவின்கீழ் விற்பனை*

கணக்கு இல. : 0020 5000 4069/1020 5000 9723-எம். ஆர். எல். ரஞ்சித்

2004.06.04 ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானி மற்றும் 2004.05.25 ஆந் திகதிய "திவயின", "ஐலண்ட்", "தினக்குரல்" ஆகிய நாளாந்த பத்திரிகைகளிலும் பிரசுரிக்கப்பட்ட 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் கடன் மீட்புச் சட்டத்தின் (விசேட ஏற்பாடுகள்) 4 ஆம் பிரிவின்கீழ் 2003.08.28 ஆந் திகதியிடப்பட்ட வரையறுக்கப்பட்ட சம்பத் வங்கியின் பணிப்பாளர் சபையினால் இணைத்துக்கொள்ளப்பட்ட தீர்மானத்தின்படி ஐந்து இலட்சத்து நாற்பத்தேழாயிரத்து முன்னூற்றெண்பத்திமூன்று ரூபா எழுபத்திரண்டு சதம் (ரூ. 5,47,383.72) தொகையுடன் 2002, திசெம்பர் 13 ஆந் திகதி முதல் விற்பனை நாள் வரை மேலும் ஒரு தொகையான நான்கு இலட்சத்து இருபத்திமூவாயிரத்து நூற்றிப்பத்தொன்பது ரூபா நாற்பத்திமூன்று சதம் (ரூ. 4,23,119.43) தொகைக்கு வருடாந்தம் இருபத்தொரு வீத (21%) மேலதிக வட்டியுடனும் விளம்பரச் செலவுகள் மற்றும் ஏனைய நிகழ்ந்த செலவுகளுடனும் கிடைக்கப்பெற்றவைகளைக் கழித்து (ஏதுமிருப்பின்) மீட்டுக்கொள்வதற்காக கண்டி அனுமதிபெற்ற ஏலதாரர் ஐ. டபிள்யூ. ஜயசூரியவினால் 26.06.2006 ஆந் திகதியன்று காலை 10.00 மணிக்கு பகிரங்க ஏலவிற்பனை மூலம் விற்பனை செய்யப்படும் என அறிவிக்கப்படுகிறது.

#### அட்டவணை

சபரகமுவ மாகாணம், இரத்தினபுரி மாவட்டத்தில், குருவிட்டி கோரளையின் பல்லேபற்றுவில் எஹலியகொட பிரதேச சபை எல்லைக்குள் கெந்தன்கமுவ இஹலகமவில் அமைந்துள்ள மாலதிகேதெனியகாவஹேன என்றழைக்கப்படுகின்ற காணியின் அனுமதிபெற்ற நில அளவையாளர் எம். ஏ. சோமரத்னவினால் 1968, திசெம்பர் 28 ஆந் திகதியிடப்பட்ட வரைபட இல. 2376 இல் லொட் 01 எனக் குறிப்பிடப்பட்டுள்ள "அசீசாவத்த" என்றழைக்கப்படும் காணியின் மண், கட்டிடங்கள், மரங்கள், பெருந்தோட்டங்கள் மற்றும் சகலவற்றுடனும் எல்லாம் பிரித்து நிர்ணயிக்கப்பட்ட காணித்துண்டுகள்- வடக்கில் : இல்லதரபெடிகஹேன ; கிழக்கில் : அதே காணியின் ஒரு பகுதியின் கம்பி வேலி ; தெற்கில் : பெருங்கடபெடிகஹேன ; மற்றும் மேற்கில் : பெருங்கடபெடிகஹேன மற்றும் கால்வாய் ஆகிய அமைவிடங்களில் வரைபட இல. 2376 இன் பிரகாரம் ஒரு ஏக்கர் மூன்று றூட் பதினெட்டு பேர்ச்சஸ் (1ஏ. 3றூ. 18பே.) விஸ்தீரணத்தைக் கொண்டமைந்துள்ளதுடன் அவிசாவளை காணிப்பதிவகத்தில் உறுதி V113/271 ஆம் இலக்கத்தின்கீழ் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

பணிப்பாளர் சபையின் கட்டளையின்படி,

கம்பனிச் செயலாளர்.

6-118/2

---

### வரையறுக்கப்பட்ட சம்பத் வங்கி

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 9 ஆம் பிரிவின்கீழ் விற்பனை அறிவித்தல்*

#### ஆதனம் மற்றும் வளவுகள் ஏலவிற்பனை

கணக்கு இல. : 0028 1000 0395-அனுகா என்ரபிரைஸஸ்

2003.12.26 ஆந் திகதியிடப்பட்ட அரசாங்க வர்த்தமானியிலும் மற்றும் 2003.12.12 ஆந் திகதியிடப்பட்ட "தினமின", "டெய்லி நியூஸ்" மற்றும் "தினகரன்" எனும் பெயரிலான தினசரி செய்திப் பத்திரிகைகளிலும் பிரசுரிக்கப்பட்ட 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின்கீழ் 2003.06.26 ஆந் திகதியிடப்பட்ட, வரையறுக்கப்பட்ட சம்பத் வங்கி பணிப்பாளர்கள் சபையினால் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்திற்கமைய, எட்டு இலட்சத்து நாற்பத்தைந்தாயிரத்து இருநூற்றெழுபது ரூபா நாற்பத்திரண்டு சதம் மட்டும் (ரூ. 8,45,270.42) கொண்ட தொகையை, மேலும் 2003, பெப்புருவரி 7 ஆந் திகதியிலிருந்து விற்பனைத் திகதிவரை ஏழு இலட்சத்து எழுபத்தெண்ணாயிரத்து முன்னூற்றைம்பத்தெட்டு ரூபா நாற்பத்திநான்கு சதம் (ரூ. 7,78,358.44) கொண்ட தொகை மீது ஆண்டுக்கு இருபத்திமூன்று சதவீத (23%) வட்டியுடனும் உறப்பட்ட விளம்பரச் செலவுகள் மற்றும் வேறு கட்டணங்கள் (எவையேனும் கொடுப்பனவுகள் பெறப்பட்டிருப்பின் அவற்றையும் கழித்து) ஆகியவற்றுடனும் சேர்த்து அறவிடுவதற்காக, இத்துடனுள்ள அட்டவணையில் முழுமையாக விவரிக்கப்பட்டுள்ள ஆதனம் மற்றும் வளவுகளை கண்டியைச் சேர்ந்த உத்தரவுபெற்ற ஏலதாரர் ஐ. டபிள்யூ. ஜயசூரிய அவர்கள் 23.06.2006 ஆந் திகதி காலை 10.30 மணிக்கு அதே இடத்தில் பகிரங்க ஏலம்மூலம் விற்பனை செய்வாரென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

#### அட்டவணை

வடமேல் மாகாணம், குருநாகல் மாவட்டம், வேஉடவில்லி ஹத்பற்று, மஹகல்பொட மெகொட கோறளை, மிஹெய்எல்லவில் அமைந்துள்ளதும் "உயன்தன எஸ்டேட்" என அழைக்கப்படும் காணியின் உத்தரவுபெற்ற நில அளவையாளர் எம். டபிள்யூ. ஆரியரட்ன அவர்களால் தயாரிக்கப்பட்டு 1998, சனவரி 7 ஆந் திகதியிடப்பட்ட வரைபடம் இல. 1324 இல் குறிப்பிடப்பட்டு துண்டு 1பி என அடையாளமிடப்பட்டதுமான பிரித்து நிர்ணயிக்கப்பட்ட காணித்துண்டு முழுவதும் அதன்கண் அமைந்தள்ள மண், மரங்கள், பயிர்ச்செய்கைகள், கட்டிடங்கள் மற்றும் எல்லாவற்றுடனும் சேர்த்து.

சொல்லப்பட்ட துண்டு 1பி இன் எல்லைகளாவன– வடக்கு : வரைபடம் இல. 1324 இல் துண்டு 1ஏ ; கிழக்கு : வரைபடம் இல. 25/86 இல் துண்டு 41 ; தெற்கு : வரைபடம் இல. 25/86 இல் துண்டு 43 ; மேற்கு : வீடுகளிலிருந்து ரிதிகம பிரதான வீதிக்குச் செல்லும் வீதி (வரைபடம் இல. 25/86 இல் துண்டு 13ஈ). இது, பன்னிரண்டு தசம் ஒன்று நான்கு பேர்ச்சுக்கள் (0ஏ. 0றூ. 12.14பே.) விஸ்தீரணமுடையது. குருநாகல் காணிப்பதிவகத்தில் தொகுதி/பக்கம் ஏ 1377/126 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

பணிப்பாளர் சபையின் கட்டளையின்படி,

கம்பனிச் செயலாளர்.

6–118/3

---

## வரையறுக்கப்பட்ட சம்பத் வங்கி

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 9 ஆம் பிரிவின்கீழ் விற்பனை அறிவித்தல்

கணக்கு இல. 0013 5001 3357–வை. கே. என். வீரசிங்க

2004.02.13 ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானியிலும் 2004.01.16 ஆந் திகதிய "திவயின", "ஜலண்ட்" மற்றும் "தினகரன்" எனும் பெயரிலான தினசரி செய்திப் பத்திரிகைகளிலும் பிரசுரிக்கப்பட்ட 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின்கீழ் 2003.11.27 ஆந் திகதியிடப்பட்ட வரையறுக்கப்பட்ட சம்பத் வங்கிப் பணிப்பாளர்கள் சபையினால் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்திற் கமைய, பன்னிரண்டு இலட்சத்து இருபத்தோராயிரத்து எண்ணூற்றிநாற்பத்திநான்கு ரூபா நாற்பத்திரண்டு சதம் (ரூ. 12,21,844.42) ஐ மேலும் 2003, செத்தெம்பர் 27 ஆந் திகதியிலிருந்து விற்பனைத் திகதிவரை எட்டு இலட்சத்து நாற்பத்தொன்பதாயிரத்து இருநூற்றைம்பது ரூபா (ரூ. 8,49,250) கொண்ட தொகை மீது ஆண்டுக்கு இருபத்தொரு சதவீத (21%) வட்டியுடனும், உறப்பட்ட விளம்பரச் செலவுகள் மற்றும் வேறு கட்டணங்கள் (எவையேனும் கொடுப்பனவுகள் பெறப்பட்டிருப்பின் அவற்றையும் கழித்து) ஆகியவற்றுடனும் சேர்த்து அறவிடுவதற்காக, இத்துடனுள்ள அட்டவணையில் விவரிக்கப்பட்டுள்ள ஆதனத்தை கண்டியைச் சேர்ந்த உத்தரவுபெற்ற ஏலதாரர் ஐ. டபிள்யூ. ஜயசூரிய அவர்களால் 26.06.2006 ஆந் திகதி பி. ப. 3.00 மணிக்கு சொத்து அமைந்த இடத்தில் பகிரங்க ஏலமூலம் விற்பனை செய்ய வேண்டுமென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

### அட்டவணை

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், சல்பிட்டி கோரளையின் பள்ளேபத்துவயில் மஹரகம" பிரதேச சபை அதிகார எல்லையினுள் பன்னிபிட்டியில் டெம்பள் ரோட்டில் வரிமதிப்பீடு இல. 159/84 இல் அமைந்த பட்டதொம்பகஹகும்புர என அழைக்கப்படும் காணியிலிருந்து உத்தரவுபெற்ற நில அளவையாளர் ஏ. ஈ. சி. பெர்னாந்து அவர்களால் தயாரிக்கப்பட்டு 1988, ஏப்பிறல் 1 ஆந் திகதியிடப்பட்ட நில அளவை வரைபடம் இல. 1115 இல் குறிப்பிடப்பட்டு துண்டு 4 என அடையாளமிடப்பட்டதுமான பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்ட காணித்துண்டு முழுவதும் அதன்கண் அமைந்த மரங்கள், பயிர்கள், கட்டிடங்கள் மற்றும் சகலதுடன் சொல்லப்பட்ட துண்டு 4 இன் எல்லைகளாவன– வடக்கில் : துண்டு நகரசபை ரோட் ; கிழக்கில் : துண்டு 5 ; தெற்கில் : ராமநாயக்க ஆரச்சிகே டொன் ஏப்ரஹம் செனவிரத்னவின் பட்டதொம்பகஹகும்புர மற்றும் மொஹொட்டிகே கும்புர மற்றும் மேற்கில் : துண்டு 3 என்பவையாகும். மேற்கூறப்பட்ட வரைபடம் இல. 1115 இற்கமைய இந்தக் காணி பதினைந்து பேர்ச்சஸ் (0ஏ. 0றூ. 15பே.) அதாவது சைபர் தசம் சைபர் மூன்று ஏழு ஒன்பது ஹெக்டெயார் (0.0379 ஹெ.) விஸ்தீரணமுடையது. இந்தக் காணி கல்கிசை காணிப்பதிவகத்தில் தொகுதி/பக்கம் எம் 2397/186 இன்கீழ் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

கம்பனி செயலாளர்.

6–118/4

---

## வரையறுக்கப்பட்ட சம்பத் வங்கி

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 9 ஆம் பிரிவின்கீழ் விற்பனை அறிவித்தல்

கணக்கு இல. 0007 5006 7379–ஏ. கரலியத்த மற்றும் ஏ. ஜே. கரலியத்த

2004.06.04 ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானியிலும் 2004.05.25 ஆந் திகதிய திவயின, ஜலண்ட் மற்றும் தினக்குரல் எனும் பெயரிலான தினசரி செய்திப் பத்திரிகைகளிலும் பிரசுரிக்கப்பட்ட 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின்கீழ் 2004.03.25 ஆந் திகதியிடப்பட்ட வரையறுக்கப்பட்ட சம்பத் வங்கிப் பணிப்பாளர்கள் சபையினால் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்திற்கமைய, இருபத்திமூன்று இலட்சத்து மூவாயிரத்து முன்னூற்றிநாற்பத்தெட்டு ரூபா நாற்பது சதம் (ரூ. 23,03,348.40) ஐ மேலும் 2003, மாச்சு 01 ஆந் திகதியிலிருந்து விற்பனைத் திகதிவரை பதின்நான்கு இலட்சத்து அறுபத்திநான்காயிரத்து பதினேழு ரூபா தொண்ணூற்றாறு சதம் (ரூ. 14,64,017.96) கொண்ட தொகை மீது ஆண்டுக்கு பதினேழு சதவீத (17%) வட்டியுடனும், மேலும் ஐந்து இலட்சம் ரூபா (ரூ. 5,00,000) கொண்ட தொகை மீது ஆண்டுக்கு பத்தொன்பது சதவீத (19%) வட்டியுடனும், உறப்பட்ட விளம்பரச் செலவுகள் மற்றும் வேறு கட்டணங்கள் (எவையேனும் கொடுப்பனவுகள் பெறப்பட்டிருப்பின் அவற்றையும் கழித்து) ஆகியவற்றுடனும் சேர்த்து அறவிடுவதற்காக, இத்துடனுள்ள அட்டவணையில் விவரிக்கப்பட்டுள்ள ஆதனத்தை கொழும்பைச் சேர்ந்த உத்தரவுபெற்ற ஏலதாரர் சொக்மன் மற்றும் சமரவிக்ரம அவர்களால் 12.07.2006 ஆந் திகதி பி. ப. 3.00 மணிக்கு சொத்து அமைந்த இடத்தில் பகிரங்க ஏலமூலம் விற்பனை செய்ய வேண்டுமென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

### அட்டவணை

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், சல்பிட்டி கோரளையின் பள்ளேபத்துவயில் கொழும்பு மாநகர தொகுதி 44 இல் கொழும்பு மாநகர சபை எல்லையினுள் கிருலப்பனையில் 1 ஆவது ஒழுங்கையில்

அமைந்த முன்பதாக வரிமதிப்பீடு இல. 34/1 தற்போது வரி மதிப்பீடு இல. 40/ 1 இல் ஹடவக்ககஹவத்த என அழைக்கப்படும் காணியிலிருந்து உத்தரவுபெற்ற நில அளவையாளர் மற்றும் மட்டமாக்குனர் எஸ். தர்மவர்தன அவர்களால் தயாரிக்கப்பட்டு 1971, ஒகத்து 21 ஆந் திகதியிடப்பட்ட நில அளவை வரைபடம் இல. 486 இல் குறிப்பிடப்பட்டு துண்டு பி என அடையாளமிடப்பட்டதுமான பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்ட காணித்துண்டு முழுவதும் அதன்கண் அமைந்த கட்டிடங்கள் மற்றும் பயிர்கள் சகலதுடன். சொல்லப்பட்ட துண்டு பி இன் எல்லைகளாவன- வடக்கில் : துண்டு ஏ ; கிழக்கில் : துண்டுகள் 5481டி மற்றும் 5481எப் ; தெற்கில் : துண்டுகள் 5481எப் மற்றும் 5481எச் (தெரு) மற்றும் ; மேற்கில் : துண்டு சி என்பவையாகும். மேற்கூறப்பட்ட வரைபடம் இல. 486 இற்கமைய இந்தக் காணி பன்னிரண்டு தசம் ஒன்று எட்டு பேர்ச்சஸ் (0ஏ. 0றூ. 12.18பே.) விஸ்தீரணமுடையது. இந்தக் காணி கொழும்பு காணிப்பதிவகத்தில் தொகுதி/பக்கம் Kiril 142/166 இன்கீழ் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

மேலும் கீழ்க்காணும் காணிகள் மேலாகவும் ஊடாகவும் வழியுரிமையுடன்-

1. கிருலப்பனையில் மேற்கூறப்பட்ட நில அளவை வரைபடம் இல. 486 இல் வழி ஒதுக்கு எனக் குறிப்பிடப்பட்ட ஹடவக்ககஹவத்த என அழைக்கப்படும் காணியின் துண்டு சி என அடையாளமிடப் பட்டதுமான காணித்துண்டு முழுவதும். சொல்லப்பட்ட துண்டு சி இன் எல்லைகளாவன- வடக்கில் : மேற்கூறப்பட்ட நில அளவை வரைபடம் இல. 486 இல 1.1. துண்டு ஏ ; கிழக்கில் மேற்கூறப்பட்ட நில அளவை வரைபடம் இல. 486 இல் துண்டு பி ; தெற்கில் : நில அளவை வரைபடம் இல. 4 (கிருலப்பனை) இல் குறிக்கப்பட்ட துண்டு 5481எச் ; மற்றும் மேற்கில் : நில அளவை வரைபடம் இல. 8/1956 குறிக்கப்பட்ட துண்டு 5481ஈ3 (வழி) என்பவையாகும். மேற்கூறப்பட்ட வரைபடம் இல. 486 இற்கமைய இந்தக் காணி ஒன்று தசம் ஒன்று ஆறு பேர்ச்சஸ் (0ஏ. 0றூ. 1.16பே.) விஸ்தீரணமுடையது. இந்தக் காணி கொழும்பு காணிப்பதிவகத்தில் தொகுதி/பக்கம் Kiril 148/30 இன்கீழ் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

2. கிருலப்பனையில் அமைந்த ஹடவக்ககஹவத்த என அழைக்கப்படும் காணியிலிருந்து உத்தரவுபெற்ற நில அளவையாளர் ஆர். எம். ஜலீல் அவர்களால் தயாரிக்கப்பட்டு 1956, யூன் 11 ஆந் திகதியிடப்பட்ட நில அளவை வரைபடம் இல. 8/1956 இல் குறிப்பிடப்பட்டு துண்டு 5481ஈ3 என அடையாளமிடப்பட்டதுமான (வழி ஒதுக்கீடு) காணித்துண்டு முழுவதும். சொல்லப்பட்ட துண்டு 5481ஈ3 இன் எல்லைகளாவன- வடக்கில் : துண்டு 5481சி ; கிழக்கில் துண்டு 5481ஈ1 மற்றும் துண்டு 5481ஈ2 ; தெற்கில் : துண்டு 5481எச் (வழி ஒதுக்கீடு) ; மற்றும் மேற்கில் : துண்டு 548ஏ (வழி) என்பவையாகும். மேற்கூறப்பட்ட வரைபடம் இல. 8/1956 இற்கமைய இந்தக் காணி நான்கு தசம் ஒன்று ஒன்பது பேர்ச்சஸ் (0ஏ. 0றூ. 4.19பே.) விஸ்தீரணமுடையது. இந்தக் காணி கொழும்பு காணிப்பதிவகத்தில் தொகுதி/பக்கம் Kiril 146/08 இன்கீழ் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

3. கிருலப்பனையில் அமைந்த ஹடவக்ககஹவத்த என அழைக்கப்படும் காணியிலிருந்து உத்தரவுபெற்ற நில அளவையாளர் ஆர். எம். ஜலீல் அவர்களால் தயாரிக்கப்பட்டு 1948, மாச்சு 16 ஆந் திகதியிடப்பட்ட நில அளவை வரைபடம் இல. 1 இல் குறிப்பிடப்பட்டு துண்டு 5481எச் என அடையாளமிடப்பட்டதுமான (வழி ஒதுக்கீடு) காணித்துண்டு முழுவதும். சொல்லப்பட்ட துண்டு 54881எச் இன் எல்லைகளாவன- வடக்கில் : மேற்கூறப்பட்ட நில அளவை வரைபடத்தில் துண்டுகள் 548ஏ மற்றும் 5481எப் ; கிழக்கில் மற்றும் தெற்கில் : மேற்கூறப்பட்ட நிலஅளவை வரைபடத்தில் துண்டு 5481எப் மற்றும் மேற்கில் : தெவட்ட ரோட் என்பவையாகும். மேற்கூறப்பட்ட வரைபடம் இல. 1 இற்கமைய இந்தக் காணி நான்கு தசம் நான்கு சைபர் பேர்ச்சஸ் (0ஏ. 0றூ. 4.40பே.) விஸ்தீரணமுடையது. இந்தக் காணி கொழும்பு காணிப்பதிவகத்தில் தொகுதி/பக்கம் Kiril 153/30 இன்கீழ் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

கம்பனி செயலாளர்.

6-118/5

---

### வரையறுக்கப்பட்ட சம்பத் வங்கி

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 9 ஆம் பிரிவின்கீழ் விற்பனை அறிவித்தல்

கணக்கு இல. 0002 1001 0831-கிறீன் ஹில்

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை அறவிடுதல் (சிறப்பேற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின்கீழ் சம்பத் வங்கி லிமிட்டெட் பணிப்பாளர் சபையினால் நிறைவேற்றப்பட்டதும், 2000.10.25 ஆந் திகதியிடப்பட்டதும் 2000.12.15 ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானியிலும், 2001 சனவரி 27 ஆந் திகதிய ஐலன்ட், திவயின மற்றும் தினகரன் ஆகிய தினசரிச் செய்தித்தாள்களிலும் வெளியிடப்பட்டதுமான தீர்மானமொன்றைப் பின்பற்றி, அறுபத்தைந்து இலட்சத்துப் பன்னிரண்டாயிரத்து இருநூற்றெண்பத்திரண்டு ரூபா (ரூ. 65,12,282) கொண்ட தொகையை 2000.08.23 ஆந் திகதி தொடக்கம் விற்பனைத் திகதிவரை இருபத்திநாலு இலட்சத்து அறுபத்தொன்பதினாயிரத்து எண்ணூற்றெழுபத்தெட்டு ரூபா (ரூ. 24,69,878) கொண்ட தொகை மீது ஆண்டொன்றுக்கு 24%ப்படியும் பதினெட்டு இலட்சத்து எண்பத்திநாலாயிரம் ரூபா (ரூ. 18,84,000) கொண்ட தொகை மீது ஆண்டொன்றுக்கு 23%ப்படியும் கணக்கிடப்பட்ட வட்டியுடனும், இதுவரை பெறப்பட்ட கொடுப்பனவுகள் (எவையேனும் இருப்பின்) அவைபோக, விளம்பரச் செலவுகள், விற்பனையில் உறப்பட்ட ஏனைய இறுப்பனவுகள் என்பவற்றோடு சேர்த்து அறவிடுவதற்காக, கொழும்பைச் சேர்ந்த உத்தரவுபெற்ற ஏலதாரர் திருவாளர்கள் சொக்மன் மற்றும் சமரவிக்ரம அவர்கள், இதற்கான அட்டவணையில் விவரிக்கப்பட்ட ஆதனத்தை 12.07.2006 ஆந் திகதியன்று ஸ்தலத்தில் வைத்து மு. ப. 11.00 மணிக்கு பகிரங்க ஏலமூலம் விற்பனை செய்வாரென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

#### அட்டவணை

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், கொழும்பு மாநகர சபை எல்லைகளுக்குள்ளாக புறக்கோட்டை, ஆட்டுப்பட்டித் தெருவில் அமைந்துள்ள 1 ஆவது பள்ளிவாசல் ஒழுங்கை, 42 ஆம் வரிமதிப்பீட்டிலக்கம் கொண்ட அதிற்காணப்படும் மண், மரங்கள், தோட்டப் பயிர்கள், கட்டிடங்கள் மற்றெல்லாவற்றுடனும் சேர்ந்த உத்தரவுபெற்ற நில அளவையாளர் எஸ். டி. நவரட்னத்தினால் ஆக்கப்பட்ட 1953, செத்தெம்பர் 7 ஆந் திகதிய 229 ஆம் இலக்க வரைபடத்தில் காட்டப்பட்டதும் 1 ஆவது பள்ளிவாசல் ஒழுங்கை, 46 ஆம் வரிமதிப்பீட்டிலக்கம் கொண்ட வளவுகளையும் சிரிப்பினா ஒழுங்கை, 43 ஆம் வரிமதிப்பீட்டிலக்கம் கொண்ட வளவுகளின் தோட்டத்தையும் வடக்கெல்லையாகவும் ; சிரிப்பினா ஒழுங்கை, 43 ஆம்

வரிமதிப்பீட்டிலக்கம் கொண்ட வளவுகளின் தோட்டத்தைக் கிழக்கெல்லையாகவும் 1 ஆவது பள்ளிவாசல் ஒழுங்கை, 38 ஆம் வரிமதிப்பீட்டிலக்கம் கொண்ட வளவுகளைத் தெற்கெல்லையாகவும் ; 1 ஆவது பள்ளிவாசல் ஒழுங்கையை மேற்கெல்லையாகவும் கொண்டதும் சொல்லப்பட்ட 229 ஆம் இலக்க வரைபடத்தின்படி விஸ்தீரணத்தில் எட்டு தசம் ஒன்று இரண்டு பேர்ச்சுகள் (0ஏ. 0றூ. 8.12பே.) கொண்டதும் கொழும்பு மாவட்டக் காணிப்பதிவகத்தில் ஏ890/220 என்பதில் பதிவுசெய்யப்பட்டதுமான காணியினதும் வளவுகளினதும் பிரிக்கப்பட்ட வரையறுக்கப்பட்ட அக்காணித்துண்டு முழுவதும்.

மேலே விவரிக்கப்பட்ட காணி உத்தரவுபெற்ற நில அளவையாளர் எஸ். ராசப்பாவினால் ஆக்கப்பட்ட 1992, மாச்சு 14 ஆந் திகதிய 3586 ஆம் இலக்க வரைபடத்திற்கிணங்க மீள் அளப்பனவு செய்யப்பட்டு பின்வருமாறு பூரணமாக விவரிக்கப்பட்டுள்ளது :

மேற்சொல்லப்பட்ட புறக்கோட்டை, ஆட்டுப்பட்டுத் தெருவில் அமைந்துள்ள 1 ஆவது பள்ளிவாசல் ஒழுங்கை, 42 ஆம் வரிமதிப்பீட்டிலக்கம் கொண்ட அதிற் காணப்படும் மண், மரங்கள், தோட்டப் பயிர்கள் மற்றும் கட்டிடங்கள் என்பவற்றுடனும் சேர்ந்த (மேலே விவரிக்கப்பட்ட காணியினதும் வளவுகளினதும் மீள் அளப்பனவான) சொல்லப்பட்ட 3586 ஆம் இலக்க வரைபடத்தில் காட்டப்பட்டுள்ளதும், 1 ஆவது பள்ளிவாசல் ஒழுங்கை, 46 ஆம் வரிமதிப்பீட்டிலக்கம் கொண்ட வளவுகளை வடக்கெல்லையாகவும் ; சிரிப்பினா ஒழுங்கை 43 ஆம் வரிமதிப்பீட்டிலக்கம் கொண்ட வளவுகளின் தோட்டத்தைக் கிழக்கெல்லையாகவும் ; சிரிப்பினா ஒழுங்கை 43 ஆம் வரிமதிப்பீட்டிலக்கம் கொண்ட வளவுகளைத் தெற்கெல்லையாகவும் ; 1 ஆவது பள்ளிவாசல் ஒழுங்கையை மேற்கெல்லையாகவும் கொண்டதும் சொல்லப்பட்ட 3586 ஆம் இலக்க வரைபடத்தின்படி விஸ்தீரணத்தில் எட்டு தசம் ஒன்று இரண்டு பேர்ச்சுகள் (0ஏ. 0றூ. 8.12பே.) கொண்டதுமான பிரிக்கப்பட்ட வரையறுக்கப்பட்ட அக்காணித்துண்டு முழுவதும்.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

கம்பனி செயலாளர்.

6-118/7

---

## கொமார்ஷல் பேங்க் ஒப் சிலோன் லிமிட்டெட் - நாவலப்பிட்டி கிளை

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவு

### மிகவும் பெறுமதிமிக்க விவசாயச் சொத்து

**கங்க இஹஹல கோறளை பிரதேச சபை எல்லைக்குட்பட்ட லென்டன் ஹில் பீ எஸ்டேட் எனும் காணியில் பிரித்தெடுக்கப்பட்ட காணித்துண்டு அத்துடன் அதனுள்ளடக்கும் மரங்கள், பயிர்கள் மற்றும் சகலதுமாகும். இது 17 ஏக்கர் 18 பேர்ச்சஸ் பரப்பளவானதாகும்.**

(இவ்வாதனம் வன்னிஆரச்சி கமல் ரோஹன பொன்சேகா என்பவர் கடப்பாடுடையவராக வழங்கப்பட்ட கடன் வசதிகளுக்காக வரையறுக்கப்பட்ட கொமர்ஷல் வங்கியினால் பெறப்பட்ட ஆதனம்.)

இவ்வாதம் 30.06.2006 ஆந் திகதி மு.ப. 11.00 மணிக்கு அதே இடத்தில் என்னால் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும்.

**தீர்மானம் பற்றிய அறிவித்தலுக்கு.-** 10.03.2006 ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானியையும் விற்பனை பற்றி அறிவித்தலுக்கு 06.03.2006 ஆந் திகதிய "ஐலன்ட்", "தினகரன்" பத்திரிகைகளையும் 07.03.2006 ஆந் திகதிய "லங்காதீப" பத்திரிகையையும் பார்க்கவும்.

